செ.வெ.எண்:10 நாள்:04.03.2021

# தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021

## பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை cVIGIL என்ற செயலி மூலமும், மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அலுவலக இலவச தொலைபேசி எண் 18004257076 மற்றும் 1950 (Toll Free) அல்லது தேர்தல் கட்டுப்பாட்டு அறை எண்.04343-233025 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

## கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021-ஐ முன்னிட்டு பணப்பட்டுவாடா மற்றும் இதர தேர்தல் முறைகேடுகள் குறித்து புகார் அளிக்க கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 24 மணிநேர தேர்தல் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது,**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 தொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 24 மணிநேரமும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை செயல்படுகிறது. பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை cVIGIL என்ற செயலியை பதிவிறக்கம் செய்து இதன் மூலம் புகார்களை தெரிவிக்கலாம்.

மேலும், மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அலுவலக இலவச தொலைபேசி எண் 18004257076 மற்றும் 1950 (Toll Free) அல்லது தேர்தல் கட்டுப்பாட்டு அறை எண். 04343-233025, வாட்ஸ்ஆப் எண். 6369700203 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம்.

இந்த கட்டுப்பாட்டு அறையில் 24 மணி நேரமும் கண்காணிக்க சுழற்சி முறையில் மூன்று குழுக்கள் மொத்தம் துணை வட்டாட்சியர் நிலையில் 3 நபர்களும் உதவியாளர் நிலையில் 6 நபர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர் (Nodal Officer) / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி), கிருஷ்ணகிரி அவர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட தொலைபேசி எண்களில் பொதுமக்கள் மற்றும் வாக்காளர்கள் தங்களின் விதிமீறல்கள் மற்றும் புகார் ஏதேனும் இருப்பின் இதன் வாயிலாக தெரிவிக்கலாம். இந்த புகார் சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கண்காணிப்பு குழுக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் மீரியிருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் அனைவரும் இந்த இலவச தொலைபேசி எண்ணை பயன்படுத்தி புகார்களை தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கிருஷ்ணகிரி.